தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புரட்டாசி 5, பார்த்திப – திருவள்ளுவர் ஆண்டு 2036

2005 செப்டம்பர் 21, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்"

உயர்ந்த பெரும்புகழ் அல்லாமல், நிலையற்ற இந்த உலகத்தில் ஒப்பற்ற ஒரு பெரும் பொருளாக, அழியாமல், நிலைத்து நிற்கக்கூடியது, வேறு ஒன்றும் இல்லை.

1. இரங்கற் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. கே.ஆர். சுந்தரம் மற்றும் திரு. கே. நாராயணசாமி பிள்ளை ஆகியோர் 5–5–2005 அன்றும், திரு. ஏ. முத்துசாமி அவர்கள் 16–5–2005 அன்றும், திரு. செ. ஆறுமுகம் அவர்கள் 2–6–2005 அன்றும், டாக்டர் எம்.பி. சேகர் அவர்கள் 3–7–2005 அன்றும், திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் 9–7–2005 அன்றும், திரு. தெ. பெருமாள் அவர்கள் 17–7–2005 அன்றும், திருமதி பி. லட்சுமி அவர்கள் 15–8–2005 அன்றும், திரு. க.சொ. கணேசன் அவர்கள் 22–8–2005 அன்றும், திரு. எல். இளையபெருமாள் அவர்கள் 8–9–2005 அன்றும், திரு. எஸ். இராமநாதன் அவர்கள் 10–9–2005 அன்றும் மற்றும் திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் 14–9–2005 அன்றும் மறைவுற்ற செய்தியினை பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. கே.ஆர். சுந்தரம் அவர்கள் குடியாத்தம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு முறையே 1980 முதல் 1984 வரை மற்றும் 1989 முதல் 1991 வரை சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. கே. நாராயணசாமி பிள்ளை அவர்கள் அன்றைய நல்லூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1962 முதல் 1967 வரை சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ஏ. முத்துசாமி அவர்கள் அன்றைய திருக்கோவிலூர் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1952 முதல் 1957 வரை நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. செ. ஆறுமுகம் அவர்கள் மதுராந்தகம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு முறையே 1971 முதல் 1976 வரை, 1977 முதல் 1980 வரை மற்றும் 1985 முதல் 1986 வரை செம்மையாகப் பணியாற்றியுள்ளார்.

டாக்டர் எம்.பி. சேகர் அவர்கள் பெரம்பூர் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1991 முதல் 1996 வரை நன்கு பணியாற்றியுள்ளார்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் ஊத்தங்கரை தொகுதி மற்றும் மொரப்பூர் தொகுதி ஆகியவற்றிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு முறையே 1967 முதல் 1971 வரை மற்றும் 1985 முதல் 1988 வரை செவ்வனே பணியாற்றியுள்ளார். மேலும் 1971 ஆம் ஆண்டு மக்களவை உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

திரு. தெ. பெருமாள் அவர்கள் கடையநல்லூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1985 முதல் 1988 வரை சிறப்புறப் பணியாற்றியுள்ளார்.

திருமதி பி. லட்சுமி அவர்கள் அவினாசி தனித் தொகுதி மற்றும் வால்பாறை தனித் தொகுதி ஆகியவற்றிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு முறையே 1985 முதல் 1988 வரை மற்றும் 1989 முதல் 1991 வரை திறம்பட பணியாற்றியுள்ளார்.